இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 25-08-2025

# துரோக கொத்தடிமைக் கூட்டணி!

**“தேசிய ஜனநாயகக் கூட்டணி என்பது வெறும் அரசியல் கூட்டணி அல்ல. தமிழ்நாட்டை வளர்ச்சி, முன்னேற்றம் அடையச் செய்யும் கூட்டணி’’ என்று திருநெல்வேலியில் வைத்து பொய்மூட்டையை அவிழ்த்து விட்டுள்ளார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் சேர்ந்து என்ன வளர்ச்சியைக் கொடுத்துள்ளன என்பதையும் அமித்ஷா சொல்லி இருந்தால் பாராட்டலாம். தமிழ்நாட்டுக்கு கெடுதல் செய்வது ஒன்றையே வழக்கமாக வைத்துள்ளது பா.ஜ.க. அதற்கு தலையாட்டி கொத்தடிமையாக இருந்துள்ளது அ.தி.மு.க. இத்தகைய துரோகக் கூட்டணிதான், இப்போது மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.**

‘‘புண்ணிய பூமியான தமிழ் மண்ணில் தமிழ் மொழியில் பேச முடியாதது வருத்தமளிக்கிறது. இந்த தமிழ் மண் வரலாறு, வீரம், பண்பாடு மிகுந்தது. இந்த மண்ணை வணங்குகிறேன்” என்று சொல்லி தனது உரையைத் தொடங்கி இருக்கிறார் அமித்ஷா. சமஸ்கிருதத்துக்கு மகுடம் சூட்டி, தமிழின் தலையில் மண்ணைப் போட்டது தானே ஒன்றிய பா.ஜ.க. அரசு?

தமிழை விட சமஸ்கிருத வளர்ச்சிக்காக 17 மடங்கு அதிக நிதியை ஒதுக்கிவிட்டு, ‘தமிழில் பேச முடியாதது வருத்தமளிக்கிறது’ என்று சொல்வது மோசடித்தனம் அல்லவா? உள்துறை அமைச்சருக்கு தமிழ் தெரியாமல் இருப்பதும், தமிழில் பேச முடியாததும் நல்லது தான்.

‘இந்திதான் அனைத்துக்கும் மூலமொழி’ என்று கண்டுபிடித்துச் சொன்னவர் இதே அமித்ஷா அவர்கள்தான். இதை விட தமிழுக்குச் செய்யும் துரோகம் இருக்க முடியுமா?

ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த கோல்வாக்கர் எழுதுகிறார்; “மொழிப் பிரச்சினைக்கு ஒரே தீர்வுதான் இருக்கிறது; சமஸ்கிருதம் ஆட்சி மொழியாக வருகின்ற காலம் வரை, இந்திக்கே நாம் முன்னுரிமை தந்து, நமது வசதிக்காக ஆட்சி மொழியாக்கிக் கொள்ள வேண்டும்.” (As a solution to the problem of ‘Lingua franca,’ till the time Sanskrit takes that place / we shall have to give priority to Hindi on the score of convenience) என்பதே அவர்களது கொள்கையாகும். ‘நாடு முழுவதும் சமஸ்கிருதத்தை கட்டாயப் பாடமாக்க வேண்டும்’ என்று ஜனசங்கம் தீர்மானம் போட்டுள்ளது. அதனால் தான் சமஸ்கிருத வளர்ச்சிக்காக பல்லாயிரம் கோடியை பா.ஜ.க. அரசு ஒதுக்கீடு செய்து கொண்டு இருக்கிறது. இதனை மறைக்கத் தான் ‘தமிழில் பேச முடியவில்லையே’ என்ற நாடகங்கள் ஆகும்.

இந்தத் துரோகத்தை மறைக்கத்தான் அ.தி.மு.க. கொத்தடிமைகள் அமித்ஷாவால் மிரட்டி பணிய வைக்கப்பட்டுள்ளார்கள். இந்திக்கு ஆதரவாக அமித்ஷா கருத்துச் சொன்னபோது, “அது அவரது சொந்தக் கருத்து” என்று சொன்னவர்தான் கொத்தடிமை பழனிசாமி.

**சிறுபான்மை சமூகத்துக்கும் இலங்கைத் தமிழர்க்கும் துரோகம் இழைக்கும் வகையில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை மாநிலங்களவையில் ஆதரித்த கட்சிதான் அ.தி.மு.க. மாநிலங்களவையில் குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் அ.தி.மு.க. எம்.பி.க்கள். அன்றைக்கு அ.தி.மு.க.வைச் சேர்ந்த பத்து உறுப்பினர்களும், பா.ம.க.வைச் சேர்ந்த அன்புமணியும் ஆதரித்து வாக்களிக்காமல் இருந்திருந்தால் இந்த சட்டமே நிறைவேறி இருக்காது என்பதுதான் உண்மை.**

“குடியுரிமைச் சட்டத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லையே? எந்த முஸ்லீம் பாதிக்கப்பட்டார்? காட்டுங்கள்?” என்று கொத்தடிமை பழனிசாமி பா.ஜ.க.வின் ஊதுகுழலாக அன்றைய தினம் கேட்டார்.

மூன்று வேளாண் சட்டங்களை பா.ஜ.க. கொண்டு வந்தபோது, “அது மிக நல்ல சட்டம், அது பற்றி நான் விவாதிக்கத் தயார், என்னிடம் விவாதிக்க வாருங்கள்” என்று நிருபர்களையே சவாலுக்கு அழைத்தவர்தான் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. மூன்று வேளாண் சட்டத்துக்கு எதிராக போராடும் எட்டு மாநில விவசாயிகளை, ‘அவர்கள் விவசாயிகள் அல்ல, புரோக்கர்கள்’ என்று கொச்சைப்படுத்தினார் பழனிசாமி.

‘நீட் தேர்வு வைத்தால் எழுதித்தான் ஆக வேண்டும். அதில் எந்த சந்தேகமும் இல்லை’ என்று சொன்னவர் தான் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. நீட் விலக்கு மசோதாவை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஒப்புக்கு அனுப்பி விட்டு, அதை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பியதைக் கூட ஒன்றரை ஆண்டுகள் வெளியில் சொல்லாமல் வைத்திருந்தவர்தான் பழனிசாமி.

முதலமைச்சர் பதவியில் இருந்து இறக்கப்பட்ட பிறகும், “நீட் தேர்வில் இருந்து விலக்கு எல்லாம் கிடையாது. எல்லாரும் எழுதித்தான் ஆக வேண்டும். உச்சநீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்துவிட்டது. அதன்படி தான் நடத்துகிறோம். அனைத்து மாநிலத்தவரும் எழுதித்தான் ஆக வேண்டும்” என்று பேசினார் பழனிசாமி.

**திராவிடத்தை விமர்சித்தும், பேரறிஞர் அண்ணாவை விமர்சித்தும் காட்சிகள் ஒளிபரப்பப்பட்ட மேடையில் வெட்கமில்லாமல் பழனிசாமியின் அ.தி.மு.க. உட்கார்ந்து இருந்தது. இதெல்லாம் கொத்தடிமைத்தனத்தின் தொடர்ச்சி அல்லவா?**

**தமிழுக்கும், தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்வது பா.ஜ.க.வின் வழக்கம். அதனைக் கண்டும் காணாமல் கொத்தடிமையாகக் கிடப்பது அ.தி.மு.க.வின் பழக்கம்.**

**அது வளர்ச்சி முன்னேற்றக் கூட்டணி அல்ல. துரோக கொத்தடிமைக் கூட்டணி ஆகும்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.8.2025) சென்னையில் நடைபெற்ற எதிர்கட்சிகள் கூட்டணியின் குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் சுதர்சன் ரெட்டி அவர்களுக்கான ஆதரவு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு, நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி கனிமொழி கருணாநிதி, கழக மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா உள்ளிட்ட இந்தியா கூட்டணியின் மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை கொறடா நாசீர் உசேன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சென்னையில் - எதிர்க்கட்சிகள் கூட்டணி குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் நீதியரசர் சுதர்சன் ரெட்டியை ஆதரித்து - முதல்வர் வாழ்த்துரை....

முதல் பக்கத் தொடர்ச்சி

உஸ்மானியா யூனிவர்சிட்டி யில் சட்டம் பயின்று, 1971-ல் வழக்கறிஞராக ப்ராக்டிஸ் செய்யத் தொடங்கினார். பின்னர், ஆந்திர மாநில அரசு வழக்கறிஞர் - ஒன்றிய அரசின் கூடுதல் நிலை ஆலோசகர் - ஆந்திர மாநில உயர்நீதிமன்ற நீதிபதி - கவுகாத்தி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி என்று படிப்படியாக தன்னுடைய career-ல் முன்னேறி, மாண்பமை உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பு வகித்து, இன்றைக்கு குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக உயர்ந்திருக்கிறார். கிட்டத்தட்ட தன்னுடைய அறுபது ஆண்டுகால வாழ்வை, சட்டம் – நீதி ஆகியவற்றுக்காக அர்ப்பணித்திருக்கிறார். இவர் நீதியரசராகப் பணியாற்றிய காலத்தில், நேர்மையாக, சுதந்திரமாகச் செயல்பட்டு, மக்களுடைய உரிமைகளையும், சமூகநீதியையும் உயர்த்திப் பிடித்து, அரசியலமைப்புச் சட்டத்தின் மாண்பையும் போற்றி பாதுகாத்தவர்.

கோவா மாநில லோக் ஆயுக்தா தலைவராகவும் இருந்துள்ளார். இவர் ஏன் இன்றைக்கு தேவைப்படுகிறார் என்றால், பா.ஜ.க.வினர் அரசியலமைப்புச் சட்டத்தைச் சிதைக்க நினைக்கின்ற இந்த நேரத்தில், அரசியல் சட்டத்தைப் பாதுகாத்த நீதியரசரான இவர், அதைப் பாதுகாக்கின்ற பொறுப்புக்குத் தேவைப்படுகிறார்! மாண்புமிகு சுதர்சன் ரெட்டி அவர்களைப் பொறுத்த வரைக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கக் கூடியவர்! அதற்கு ஒரு எடுத்துக்காட்டுதான், புதிய தேசிய கல்விக் கொள்கையை திரும்பப் பெற வலியுறுத்தி, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் – கலைஞர்கள் சங்கம் நடத்திய மாநாட்டில் அவர் பேசியது!

**அவர் பேசியதை சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், “இது திருவள்ளுவர், பாரதியார், பெரியார், கலைஞர் ஆகியோருடைய மண். போராட்டக் குணத்தை இந்த மண் எப்போதும் விடுவதில்லை” என்று சொல்லி, “புதிய தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராகப் போராடுவது நம்முடைய கடமை. இது இந்த தேசத்துக்கு நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான பணி. இவர்கள் கொண்டுவர நினைக்கின்ற தேசிய கல்விக் கொள்கை மனித மாண்புகளுக்கு எதிரானது. “நான் - எனது - என்னுடையது” என்ற கலாச்சாரத்தை மட்டுமே இது உருவாக்கும். பன்முகத் தன்மையையோ, கல்வியின் ஜனநாயகப் பரவலையோ இது உருவாக்காது” என்று தன்னுடைய கருத்துகளைப் பதிவு செய்து, தமிழ்நாட்டின் உணர்வுகளை உறுதியுடன் வெளிப்படுத்தினார். இப்படி, அரசியலமைப்புச் சட்டத்துக்காகவும், தமிழ்நாட்டுக்காகவும், முற்போக்காக வும், மக்களுக்காகவும் பேசுகின்ற இவரை நாம் முன்மொழிய, இதைவிடப் பெரிய காரணம் தேவையா?**

> **“இந்தியாவின் அடிப்படைக் கொள்கைகளான மதச்சார்பின்மை, கூட்டாட்சித் தத்துவம், சமூகநீதி, ‘வேற்றுமையில் ஒற்றுமை’ ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட ஒருவர் இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கிறார். அவரை ஆதரிப்பதுதான் நம்முடைய முன்னால் இருக்கின்ற கடமை!”**

### கையாலாகாதவர்கள் நீதியரசர் மீது பழிபோட்டுத் தப்பிக்க முயற்சி!

ஆனால், முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசரை உள்துறை அமைச்சர் என்னவென்று விமர்சிக்கிறார்? நக்சல் என்று சொல்கிறார்! ஒரு உள்துறை அமைச்சர், தன்னுடைய பொறுப்பை மறந்து, ஒரு முன்னாள் நீதியரசர் பற்றி அபாண்டமாகப் பேசி இருக்கிறார். அவர்களால் தீவிரவாதத்தை ஒழிக்க முடியவில்லை! அந்தக் கையாலாகாத நிலையை மறைக்க, நீதியரசர் மேல் பழி போட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

### சுதர்சன் ரெட்டி அவர்களை ஆதரிக்க வேண்டியது நமது கடமை!

ஒன்றிய பா.ஜ.க. அரசு இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது? அரசியல் எதிரிகளைப் பழிவாங்க, புலனாய்வு அமைப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறது. தன்னாட்சி அமைப்புகளை, பா.ஜ.க.வின் துணை அமைப்புகளாக மாற்றிக் கொண்டிருக்கிறது. அரசியலமைப்புச் சட்டமே ஆபத்தில் சிக்கி இருக்கிறது. இந்தச் சூழலில், இந்தியாவின் அடிப்படைக் கொள்கைகளான மதச்சார்பின்மை, கூட்டாட்சித் தத்துவம், சமூகநீதி, ‘வேற்றுமையில் ஒற்றுமை’ ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட ஒருவர் இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கிறார். அவரை ஆதரிப்பதுதான் நம்முடைய முன்னால் இருக்கின்ற கடமை!

### மக்கள் நலனுக்கான கருத்தியலையே ஆதரிக்க வேண்டும்!

ஆனால், பா.ஜ.க.வோ, தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எதிரான அத்தனை நடவடிக்கைகளையும் செய்துவிட்டு, தமிழர் என்ற முகமூடியை அணிந்து ஆதரவு கேட்கிறார்கள். இதெல்லாம் ரொம்ப பழைய ‘ட்ரிக்’! தனிமனிதர்களைவிட தத்துவங்கள்தான் அரசியலை வழிநடத்தும். தனி மனிதர்கள் என்பவர்கள் வெறும் பிம்பங்கள்தான். அதனால், எந்தக் கருத்தியல், மக்களுக்கான, மக்கள் நலனுக்கான கருத்தியலோ, அதைத்தான் ஆதரிக்க வேண்டும்.

### ஜனநாயகம் காப்போம்! நாடாளுமன்ற மரபுகள் காப்போம்!

எனவே, சட்டநீதிக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் போராடிய, வாதாடிய, தீர்ப்பு வழங்கிய மாண்பமை சுதர்சன் ரெட்டி அவர்கள் இந்திய ஜனநாயகத்தைக் காக்க, நாடாளுமன்ற மரபுகளைக் காக்க, மக்களாட்சியைக் காக்க, அரசியலமைப்பைக் காக்க குடியரசுத் துணைத் தலைவராக வெற்றி பெற்று வரவேண்டும் என்று வாழ்த்தி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.


## கூட்டாட்சிக் கருத்தியலின் காப்பாளராக முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்! கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாக்க துணிச்சலுடன் போராடுகிறார்!

# எனக்கு வாக்களித்தால் அரசியல் அமைப்புச் சட்டத்தைக் காப்பாற்ற முழு மூச்சுடன் பாடுபடுவேன்!

## சென்னையில் – எதிர்க்கட்சிகள் கூட்டணி குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் – நீதியரசர் சுதர்சன் ரெட்டி உரை!

**சென்னை, ஆக.25-**

**சென்னை - தியாகராயர் நகர், ‘அக்காா்டு’ ஓட்டலில் நேற்று (24.8.2025) மாலை ‘இந்தியா’ கூட்டணி குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் சுதர்சன் ரெட்டி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட இந்தியா கூட்டணித் தலைவர்கள் மற்றும் எம்.பி.க்களிடம் தனக்கு ஆதரவு கேட்டுப் பேசுகையில், “கூட்டாட்சிக் கருத்தியலின் காப்பாளராக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார்! கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாக்க அவர் துணிச்சலுடன் போராடுகிறார்!” என்றும், “எனக்கு வாக்களித்தால் அரசியல் அமைப்புச் சட்டத்தைக் காப்பாற்ற முழு மூச்சுடன் பாடுபடுவேன்!” என்றும் குறிப்பிட்டார்.**



**இந்நிகழ்வில் நீதியரசர் சுதர்சன் ரெட்டி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

தமிழ்நாட்டின் தனிச் சிறப்பு வாய்ந்த திராவிடக் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பிரதிநிதித்துவப் படுத்திய சிறந்த தலைவர்களுக்கு என் மரியாதையைச் செலுத்துகிறேன்.

இந்த வேளையில், பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர், காமராஜர், எம்.ஜி.ஆர். போன்ற மகத்தான தலைவர்களை இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

மேலும், இந்தக் கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம், இசையை பிரதிநிதித்துவப்படு த்திய திருவள்ளுவர், பாரதியார், எம்.எஸ்.சுப்புலட்சுமி மற்றும் ராஜாஜி போன்ற தலைவர்களுக்கும், இந்த மாபெரும் நிலமான தமிழ்நாட்டிற்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து பெரிய நாகரிகங்களும் மனிதச் சமுதாயங்களும் ஒரு உண்மையை அறிந்திருந்தன. அதாவது, மனிதன் கற்பனை செய்யும் திறன் கொண்டவன். இந்தியா அந்தக் கற்பனைத் திறனை வளர்த்தது. ஆனால், இந்தியாவில் அந்தக் கற்பனைத் திறனை மிகச்சிறப்பாக வளர்த்த மாநிலம் தமிழ்நாடு. இந்த தொலைநோக்குப் பார்வை இல்லையெனில், இன்று தமிழ்நாடு முன்னேற்ற நிலையை எட்டியிருக்காது.

### முன்னோடி மாநிலம்!

தமிழ்நாடானது, மனித வள மேம்பாட்டுக் குறியீடு, சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் இந்தியாவை முழுவதையும் முன்னின்று வழிநடத்துகிறது. சமூகத்தின் பின்தங்கியோருக்கான சமூக-பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கியதிலும் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகும். அது என் இதயத்திற்கு மிக நெருக்கமானது.

நான் வழங்கிய தீர்ப்புகள் குறித்து நான் பேசுவதில்லை. அதைப் பற்றி நீங்களும் சமூகமுமே தீர்மானிக்க வேண்டும். நான் அரசியல் சாசனத்தை உண்மையாகவும், விசுவாசமாகவும் தூக்கிப் பிடித்தவன். இப்போது, நீங்கள் எனக்கு ஒரு வாய்ப்புத் தந்தால் அரசியல் சாசனத்தைப் பாதுகாக்க அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொள்வேன்.

நான் உங்கள் முன் நின்று கூறுகிறேன், கூட்டாட்சித் தத்துவத்தையும், அரசியலமைப்புச் சட்டத்தையும் கைவிடமாட்டேன். முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டாட்சித் தத்துவத்தின் வீரனாகத் திகழ்கிறார். மேலும், அவர் அரசியல் சாசனத்தின் பிரதிநிதியாகவும் செயல்படுகிறார். அவர் இதற்காக தற்போது வரை ஏராளமான சவால்களைச் சந்தித்து, அவற்றை மிகவும் தீரத்துடன் எதிர்த்து வருகிறார்.

### அரசியல் சாசனம் ஆபத்தில்!

இந்தியாவின் அரசியல் சாசனம் ஆபத்தில் உள்ளது. “ஒரே நாடு” என்று பேசுகிறார்கள். ஆனால், இந்தியா என்பது மாநிலங்களின் கூட்டமைப்பு ஆகும். முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டாட்சித் தத்துவத்தைக் காப்பாற்றுவதற்காக “ஒரே நாடு” என்று பேசுபவர்களிடம் இருந்து தொடர்ந்து பல சவால்களைச் சந்தித்து வருகிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பின்னர், சுதர்சன் ரெட்டி அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-**

நாடாளுமன்ற எதிர்க்கட்சிகளின் சார்பில் துணை குடியரசுத் தலைவர் வேட்பாளராக நான் நிறுத்தப்பட்டுள்ளேன். எந்த அரசியல் கட்சியிலும் நான் சேர்ந்திராததால்தான் எதிர்க்கட்சிகள் என்னைத் துல்லியமாகத் தேர்வு செய்துள்ளன. அந்தந்த அரசியல் கட்சிகளின் ஒவ்வொரு தலைவருக்கும் நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். நாட்டின் 60 விழுக்காடு வாக்காளர்களின் பிரதிநிதியாக நான் நிறுத்தப்பட்டுள்ளேன்.

இந்தப் பயணம் எனக்கு 1971 முதல் தொடர்கிறது. துணைக் குடியரசுத் தலைவர் பதவி என்பது அரசியல் நிறுவனம் அல்ல. அதனைச் சார்பின்றி செயல்படுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது. என்னைப் பொருத்தமான வேட்பாளராகக் கருதிய அனைவருக்கும் நம்பிக்கையையும் உறுதியையும் வழங்குகிறேன்.

### பொதுநலத் தலைவர் மு.க.ஸ்டாலின்!

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மிகத் திறமையான நபர். அவரால்தான் இந்நிலைமை சாத்தியமானது. அவர் ஒரு சிறந்த பொதுநலத் தலைவர். அவரை நேரில் சந்திப்பது எனக்கு மகிழ்ச்சியானது.

அமித்ஷாவின் அறிக்கைக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அது குறித்து நான் தொடர்ந்து பதிலளிக்க விரும்பவில்லை.

### வாக்குறுதி!

சி.பி.ராதாகிருஷ்ணனுக்கும் எனக்கும் வித்தியாசமே இல்லை. அவர் தமிழ்நாட்டில் பிறந்தவர், நான் ஆந்திராவில் பிறந்தவன். மற்ற வேட்பாளர் குறித்து எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை. இந்தத் தேர்தல் மிகவும் மரியாதைக்குரிய முறையில் நடைபெறும் என்று நான் நாட்டிற்கு வாக்குறுதி அளித்துள்ளேன்.

நான் ஒரு சுதந்திர அரசியல் ஜனநாயகவாதி. அரசியலமைப்பின் படியே எனது கடமைகளை நிறைவேற்றி வந்துள்ளேன்.

நான் தெலுங்கானாவைச் சேர்ந்தவன். கூட்டணி என்பது வேறுபட்டது. எனவே சந்திரபாபு நாயுடுவுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. எனது வேட்பு மனுவை என் திறமையின் அடிப்படையிலேயே பார்க்கிறேன்.

இவ்வாறு சுதர்சன் ரெட்டி அவர்கள் கூறினார்.